தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 24, வெள்ளிக்கிழமை.

சித்திரை 11, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்".

இந்தத் தொழிலை இக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியை தனி தாலுக்காவாக உயர்த்துதல்.

474—(*வினா எண் 4307) திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியை தனி தாலுக்காவாக உயர்த்துவது குறித்த செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில்? எப்பொது தாலுக்காவாக ஆக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பெரிய வட்டங்களைத் தேவையின் அடிப்படையிலும் அரசின் நிதி நிலைக்கேற்பவும் காலப் போக்கில் பிரித்தமைக்கலாமென்று அரசு கருதுகிறது. கடலாடி தனி வட்டமாக எப்பொழுது அமைக்கப்படுமென்று திட்டவட்டமாகக் கூறவியலாது.

[1987 ஏப்ரல் 24

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கடலாடி ஒன்றியம் 75 கிலோ மீட்டர் நீளமும் 30 கிலோ மீட்டர் அகலமும் உள்ள மிகப்பெரிய பரப்பளவைக் கொண்ட ஒன்றியமாக இருக்கிறது. சட்டமன்றப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளர்கள் 97,000 பேர் கள், உள்ளாட்சிமன்றத் தொகுதிகளில் 1,15,000 என்ற அளவிலே மிகப் பெரிய ஒன்றியமாக, 60 பஞ்சாயத்துக்கள் நிரம்பியிருக்கிற காரணத்தாலே, அதனுடைய நிர்வாக வசதிக் காகவும் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் பின் தங்கிய பகுதியாக இருக்கிற கடலாடி பகுதியை நடப்பாண்டிலே தாலுக்காவாக்க வேண்டுமென்ற எண்ணத்தை இந்த அரசு நிறைவேற்றுமா என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் வட்டம் மிகப் பெரியதாக இருக்கிற காரணத்தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்துரு அரசின் ஆய்வுக்குக் கொண்டு வரப்பட்டு அதை அரசளவிலே ஆராய்ந்து இரண்டாகப் பிரிக்க லாம் என்ற அளவுக்கு ஒரு ஆய்வு நடத்தப்பட்டு ஒரு வட்டத் தினுடைய தலைநகராக முதுகுளத்தூரையும் மற்றொரு வட்டத்தினுடைய தலைநகராக கடலாடியை அமைப்பதா அல்லது சாயல்குடியை அமைப்பதா என்ற பிரச்சினை எழுந்து முதுகுளத்தூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது முடி வெடுக்கலாம் என்று அந்தக் கருத்துரு அங்கே அப்படியே வைக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கருத்துருவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது மறுபடியும் முடிவு கட்ட வேண்டும். ஆகவே, நிதிநிலையைப் பொறுத்தும் வட்டங்களைப் பிரிப்ப தற்கான செயற்குறிப்பை முழுமைப்படுத்தும்போது அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு இரண்டாகப் பிரிக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படும். ஆனால் முதுகுளத்தூர் வட் டத்தை இரண்டாகப் பிரிக்கலாம் என்ற ஒரு கருத்தினுடைய அடிப்படையிலே ஆய்வு மட்டும் நடைபெறுகிறது.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது 70 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலிருந்து விவசாயிகள் அவசரத்திற்காக வட்டாட்சியரைப் பார்ப்பதற்காக வருவது என்றால் இரண்டு மூன்று பேருந்துகள் மாறித்தான் வரவேண்டும். அந்த அளவு ஏழை விவசாயிகள் வட்டாட்சியரைப் பார்ப்பதற்கு 70 கிலோ மீட்டர், 80 கிலோ மீட்டர் தூரம் அலைகின்ற அவல நிலையைப் போக்குகின்ற வகையில் இந்த ஆண்டு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து இதுபோன்ற கோரிக்கைகள்

வந்தாலும் கடலாடி தொகுதிக்கு மட்டும் முன்னுரிமை வழங்கி ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இந்த நடப்பாண்டிலேயே அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி 12 செயற்குறிப்புகள் அரசினுடைய ஆய்விலே இருந்து வருகின்றன. முதுகுளத்தூர் ஆய்வு 6-வது செயற்குறிப்பாக முன்னுரிமை வரிசையிலே இருந்து வருகிறது. ஆகவே ஆய்விலே எடுத்துக் கொள்ளப்பட்டதன் காரணமாக படிப்படியாக நிறைவேற்றுகின்ற சூழ்நிலை ஏற்படும்போது முதுகுளத்தூர் பிரிக்கப்படுகின்ற தன்மையும் மேற்கொள்ளப்படும். ஏற்கனவே நீண்ட நெடுங்காலமாக இவையெல்லாம் தனி வட்டங்களாக அமைந்து, பணிகளை மேற்கொண்டுதான் வந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று மக்களுடைய நலன்கள், வசதிகள் பெருக வேண்டுமென்று கருதியும், அவர்களுடைய சிரமங்களைக் குறைக்க வேண்டுமென்று கருதியும், பணிகள் எல்லாம் விரைவாக, நன்றாக நடைபெற வேண்டுமென்று கருதியும்தான் இரண்டாகப் பிரிக்கின்ற நடவடிக்கை அண்மையிலே மேற்கொள்ளப்பட்டு 130, 132 வட்டங்கள் இருந்த இடத்தில் இப்பொழுது 168 வட்டங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் வட்டங்கள் பிரிக்கின்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது.

நிலவள வங்கிகளில் கடன் பெறுதல்.

475—(*வினா எண் 6197) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலவள வங்கிகளில் கடன்பெறும்போது அடமானம் செய்ய பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டணம் எந்த விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அவற்றின் அங்கத்தினர்கள் அவற்றிடமிருந்து பெறப்படும் கடன் தொகைக்கு ஈடாக அடமானப் பத்திரம் பதிவு செய்யப்படுவதற்கு, கடன் தொகை ரூ. 5,000 வரைக்கும் பதிவுக் கட்டணம் பாதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது. ரூ. 5,000-க்கு மேற்பட்ட அட